

# கே.எல்.என்.பொறியியல் கல்லூரியில் 25-வது கல்லூரி ஆண்டு விழா

மதுரை, மார்ச். 30-

கே.எல்.என்.பொறியியல் கல்லூரியில் வெள்ளி விழா ஆண்டின் 25வது கல்லூரி ஆண்டு விழா கல்லூரி உள் விளையாட்டரங்கில் நடைபெற்றது. விழாவின் தொடக்கத்தில் புல்வாமாவில் உயிர்நீத்த நம் இந்திய இராணுவ வீரர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து கல்லூரி தலைவர் பொறியாளர் கே.என்.கே. கார்த்திக் வரவேற்புரை மற்றும் தலைமை உரை ஆற்றினார். கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளருமான முனைவர். கே.என்.கே.கணேஷ் சிறப்புரை நிகழ்த்தினார். கே.எல்.என்.பொறியியல் கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்களின் கல்வி வளர்ச்சிகள், சாதனைகள் மற்றும் புதிதாக வடிவமைக்கப்பட்ட கல்லூரி உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஆண்டறிக்கையை கல்லூரி முதல்வர் முனைவர். ஏ.வி.ராம்பிரசாத் வாசித்தார்.

விழாவின் சிறப்பு விருந்தினர் சந்திரசேகர் சென்னியப்பன், சீனியர் டைரக்டர், எச்.ஆர். வெர்டியுசா, பெங்களூர் அவர்களை கல்லூரியின் தலைவர் பொறியாளர் கே.என்.கே.கார்த்திக் பொன்னாடை போர்த்தியும், கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளருமான முனைவர்.கே.என்.கே. கணேஷ் நினைவுப்பரிசு வழங்கியும் கௌரவித்தனர். சிறப்பு விருந்தினர் ஆண்டு விழா உரை நிகழ்த்தும் போது "மாணவர்கள் ;கல்வி என்பதை இலக்காகவும், அந்த இலக்கிற்கான காரணம் வருங்கால சமுதாயத்திற்கான பயன்பாடாகவும் கொண்டு தங்களது கல்வியை விரும்பி அதில் முழுக்கவனம் செலுத்தி, தன்னம்பிக்கையோடு உழைத்து அந்த இலக்கை அடைய வேண்டும்" என்று கூறியது உரையின் சிறப்பம்சமாக அமைந்தது. கல்வியில் சாதனை புரிந்த 146 மாணவர்களுக்கு பரிசுகளும், கல்லூரியில் சிறந்த துறைகளுக்கான கோப்பைகளும் மற்றும் 20 ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கான ஊக்கப்பரிசுகளும் சிறப்பு விருந்தினர் தசந்திரசேகர் சென்னியப்பன் வழங்கினார். முடிவில் பேராசிரியர் கே.எஸ்.கே.சுப்பிரமணியன் நன்றியுரை ஆற்றினார்.

# கேஎல்என் பொறியியல் கல்லூரி ஆண்டு விழா

■ மதுரை

மதுரை கேஎல்என் பொறியியல் கல்லூரியின் 25-வது ஆண்டு விழா நடந்தது.

கல்லூரித் தலைவர் கார்த்திக் வரவேற்றார். செயலர் கணேஷ் பேசினார். கல்லூரி முதல்வர் ராம்பிரசாத் ஆண்டறிக்கை வாசித்தார்.

சிறப்பு விருந்தினராக பெங்களூரு விர்டுசாவின் மனிதவளப் பிரிவு மூத்த இயக்குநர் சந்திரசேகர் சென்னியப்பன் கலந்துகொண்டு பேசும்போது, "மாணவர்கள் கல்வியை இலக்காகக் கொண்டு முழு மூச்சுடன் செயல்பட வேண்டும். எதிர்கால சமூகத்துக்காகப் பயன்படும் வகையில் கல்வியில் முழுக்கவனம் செலுத்தவேண்டும்" என்றார்.

கல்வியில் சிறந்து விளங்கும் 146 மாணவர்களுக்கு பரிசுகளும், சிறந்த துறைகளுக்கான கோப்பைகளும், ஆசிரியரல்லாத 20 பேருக்கு ஊக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன. பேராசிரியர் சுப்ரமணியன் நன்றி கூறினார்.



▲ மதுரை கேஎல்என் பொறியியல் கல்லூரி விழாவில் சிறந்த மாணவிக்கு பரிசு வழங்கினார் பெங்களூரு தனியார் நிறுவன உயர் அதிகாரி சந்திரசேகர் சென்னியப்பன்



■ மதுரை கே.எல்.என்.பொறியியல் கல்லூரி 25 வது.ஆண்டு விழாவில் பெங்களூர் வெர்டியுசா முதுநிலை இயக்குனர் சந்திரசேகர் சென்னியப்பன் மாணவிக்கு சான்றிதழ் வழங்கினார். இடமிருந்து முதல்வர் ராம்பிரசாத்,கல்லூரி தலைவர் கே.என்.கே. கார்த்திக், செயலர் கே.என்.கே.கணேஷ்,பொருளாளர் பி.கே. மோதிலால்.